*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)* *DOI: https://doi.org/10.63300/tm07052026*
www.tamilmanam.in

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary

Article DOI: https://doi.org/10.63300/tm07052026.43

# The Civilization of Painting as Portrayed in Epics

**Mrs. K. Swathi[1*], Dr. A. Karpagam[2],**
[1]Full-Time Ph.D. Research Scholar, Government Arts College (Autonomous), Karur – 5.
[2]Research Supervisor & Associate Professor, Department of Tamil Studies, Government Arts College (Autonomous), Karur – 5.
[*]Corresponding Author: thikamal12@gmail.com, Tel: +919159285297

**Article Info**
Received on 27-April-2026, Revised on 29-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

The epics written in Tamil—namely Silappathikaram, Manimekalai, Kundalakesi, Valayapathi, and Seevaka Chinthamani—are collectively known as the Aimperum Kaappiyangal (The Five Great Epics). Among these, Silappathikaram and Manimekalai emerged during the Post-Sangam period, while the rest originated during the Chola period. Among the epics that have appeared in Tamil, only Silappathikaram, Manimekalai, and Periyapuranam were composed with the stories and landscapes of Tamil Nadu as their core themes. The others are adaptations or Tamil translations of works from Sanskrit and Prakrit languages.

These books are named after specific pieces of jewelry. Silappathikaram derives from Silambu, an ornament worn on the feet by women; it is the history born out of Kannagi's anklet. Manimekalai refers to a waist ornament worn by women to keep their attire intact, and thus narrates the story of the woman who wore it. Kundalakesi derives from Kundalam, a type of earring worn by women; Kundalakesi refers to a woman with beautiful hair who wore these earrings, and the book recounts her history. Valayapathi refers to a woman adorned with bangles (Valayal), and the book tells her story. In Seevaka Chinthamani, Chinthamani denotes a precious gem embedded in a king's crown; this book narrates a history written by elevating Seevakan as the crowning jewel. The epics that emerged and gained fame in this manner constitute the Five Great Epics.

This research has been undertaken with the objective of analyzing the cultural traditions of the art of painting among the various cultural heritages featured in these works. Art inherently manifests as an expression of emotion, bringing pleasure and happiness. In that regard, this study illuminates how closely connected the epics are with the fine arts.

***KEYWORDS:*** *Tamil Epics, Cultural Heritage, Fine Arts, History of Painting, Sangam and Chola Periods*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

# காப்பியம் காட்டும் ஓவிய நாகரிகம்

[1]**திருமதி. க. சுவாதி,** முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 5.
[2]**முனைவர் எ. கற்பகம்,** ஆய்வு நெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 5.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே சேர்ந்து ஐம்பெருங்காப்பியங்கள் என அறியப்பட்டன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகளையும் சங்கம் மருவிய காலத்திலேயே தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவை. தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதை புலனை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டவை. மற்றவை சமஸ்கிருதம் பிராகிருதம் மொழிகளை தழுவியும் தமிழாக்கங்களாகவும் உள்ளன. இந்த நூல் பெயர்கள் அணிகலன்களை பெயரால் சூடப்பெற்றது. சிலப்பதிகாரம் சிலம்பு என்பது மகளிர் அணியும் காலணியை குறித்தது கண்ணகியின் காற் சிலம்பால் உருவாகிய வரலாறு ஆகும். மணிமேகலை, ஆடை அவிழாமல் இருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி இதனால் அதை அணிந்த பெண்ணின் வரலாறு. குண்டலகேசி, குண்டலம் என்பது மகளிர் அணியும் காதுவளையும் – குண்டலமும் கூந்தல் அழகும் கொண்டவள் குண்டலகேசி அவளின் வரலாற்றைக் உரைக்கும் நூல் குண்டலகேசி ஆகும். வளையாபதி, வளையல்களை அணிந்த பெண் வளையாபதி அவள் வரலாறு கூறும் நூல். சீவகசிந்தாமணி, சிந்தாமணி என்பது அரசன் முடியில் (கிரீடத்தில்) பதிக்கப்படும் மணிக்கல் சீவகனை மணிமுடியாக்கி எழுதப்பட்ட வரலாறு கூறும் நூல். இவ்வாறு எழுந்து புகழ் பெற்ற காப்பியங்கள் ஐம்பெரும் காப்பியம் ஆகும். இதில் இடம் பெறும் பண்பாட்டு மரபுகளில் கலை மரபான ஓவியக்கலையின் பண்பாட்டை ஆராயும் நோக்கம் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலை என்றாலே இன்பம் மகிழ்ச்சி என உணர்வின் வெளிப்பாடாக அமையும். அவ்வகையில் காப்பியம் கலைகளோடு இயைந்தவை என்பதை இவ்வாய்வின் மூலம் உணரமுடிகிறது.

**முன்னுரை**

கலை என்பது பண்பாடு வளர்ந்த இடத்தில் தோன்றியது. இசைக்கு யானையும் கட்டுப்படும் என்பது மூத்தோர் கூற்று, ஓவியம், சிற்பக்காட்சி கண்டோரை மெய்மறக்கச் செய்யும். வானளாவிய கட்டங்கள் கோபுரங்கள், மகால்கள், அரண்மனைகள், மலைக்குடைவுகள் ஆகியவை கலை வளர்த்த தமிழகத்தில் இன்றும் அழியாமல் உள்ளன.

, | Copyright © Author(s)

கலை என்பது பண்பாட்டின் வளர்ச்சியில் தோன்றுவது. கலையின் அடிப்படை அழகுணர்வே. எனவே தான் கலைகளை அழகுக்கலைகள் என்று கூறுகின்றனர். மனிதன் காட்டில் வாழ்ந்த காலத்திலேயே அவனிடம் பண்பாடு முளைவிடத் தொடங்கிவிட்டது. அதனால் தான் இலைதழைகளால் உடை உடுத்தக் கற்றுக்கொண்டான். குகைகளில் ஓவியங்கள் வரையத் தொடங்கினான். கற்களால் செய்யும் கருவிகளில் கூட அழகுணர்வு புலப்படத் தொழில் திறம் காட்டினான், மண்ணால் செய்த பாண்டங்களிலும் அழகிய உருவம் படைக்கச் செய்தான் பண்டைகாலத்திலிருந்தே கலைகள் படிப்படியாக வளர்ந்தன. அக்கலைகள் மனிதனின் பண்பாட்டையும் வளர்த்தன.

ஆய கலைகளை அறுபத்து நான்கு என முன்னோர் குறிப்பிட்டனர். தமிழ் நூல்களில் முதன் முதலில் சிலப்பதிகாரமே கலைகளை அறுபத்து நான்கு என குறிப்பிடுகிறது. சில கலைகள் காலப்போக்கில் அழிந்துவிட்டது. நிலை பெற்ற கலைகள் உள்ளன. அவை இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை இவை ஐந்தும் உலகமெங்கும் வாழும் கலைகளாகும்.

அக்கலைகளில், ஓவியக்கலையின் சிறப்பையும் மரபையும் ஐம்பெருங்காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன என ஆராயப்பட்டுள்ளது. எனவே, “ஐம்பெருங் காப்பியங்களில் ஓவிய பண்பாட்டு மரபுகள்” என்னும் தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்**

கிழி, திரைச்சீலை, எழினி, மாளிகை.

**ஓவியக்கலை**

‘ஓ’ என்ற எழுத்தே ஓவியம் என்ற பொருளுடையதாகப் பண்டைக் காலத்தில் இருந்தது. கற்காலத்திலேயே ஓவியக்கலை உருவாகத் தொடங்கிவிட்டது. மனிதன் குகைகளில் வாழ்ந்த போதே ஓவியம் தீட்டியிருக்கிறான். வேட்டையாடி உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்ட காலத்திலும் கூட ஓவியம் படைத்திருக்கிறான். தமிழகத்தில் கீழ்வாலை, முத்துப்பட்டி, ஆணைப்பட்டி, வேட்டைக்காரன் பாளையம் ஆகிய ஊர்களில் வேட்டையாடுவதைக் குறிக்கும் பழமையான பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. கோயில் சுவர்கள், அரண்மனைப் பள்ளியறைகள், கொலுமண்டபங்கள் என அனைத்து இடங்களிலும் வரையப்பெற்ற ஓவியங்கள் இன்னும் தமிழகத்தில் அழியாமல் கிடைக்கின்றன.

ஓவியத்திற்கு என்றே தனி இடம் இருந்தது என்பதைச் சித்திரமாடம் என்ற சொல் வெளிப்படுத்துகிறது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்தில் ஓவியத்தினைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலும் ஓவியக் கலை மரபுகள் காணப்படுகிறது. ஓவிய கலைஞர்களை 'கண்ணுள் வினைஞர்' என்று அழைக்கும் வழக்கத்தை குறிப்பிடுகின்றனர். ஓவியம் வரையப்பட்ட திரைச் சீலைகள் பற்றிய செய்திகளை சிலம்பு கூறுகிறது. மாதவியின் நடனம் அரங்கேற்றப்பட்ட மேடையில் இத்தகைய ஓவியத் திரைச் சீலைகள் பயன்படுத்தினர் என்பதையும் சிலம்பு கூறுகிறது. இவை 'ஓவிய எழின்' என்றும் அழைக்கப்பட்டன. அரங்கேற்ற மேடையின் விதானத்தில் அனைவரும் தொழுது போற்றும் படியாக நால்வகை வண்ண வருண பூதங்களின் உருவங்களை ஓவியமாக எழுதி வைத்தனர். மேடையின் மேல் விதானம் அழகுறக் காட்சியளிப்பதற்குச் சித்திரம் வரைந்த திரைச் சீலைகளைக்கட்டி வைத்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையால் அறிய முடிகிறது.

சுவர் ஓவியங்கள் தமிழகத்தில் பழமையானவையாகும். மரப்பலைகை, கிழி எனப்பட்ட துணிச்சீலைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. துணியில் ஓவியம் வரைவதே படம் எனப்பட்டது. திரைச்சீலையிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் இதை ஓவிய எழினி என்கிறது. பண்டைக் காலத்தில் அதை அரண்மனை, செல்வந்தர்களின் மாளிகை, கோயில் மண்டபங்களில் ஓவியங்கள் வரையப்பட்டன. அரண்மனைகளில் சித்திரமாடம் என்ற தனிக் கட்டிடம் இருந்தது. பாண்டிய நன்மாறன் எனும் அரசன் சித்திர மாடத்தில் இருந்த போது தான் உயிர் நீத்தார். அவரை சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று புறநானூறும் கூறுகிறது.

சிலப்பதிகார கதாபாத்திரத்தில் வரும் மாதவி நாடக கலை, நடிகை. பல வகை கலைகளைக் கற்று தேர்ந்தவர். ஓவியக் கலையையும் அவர் கற்றிருந்தார்.

ஓவியத்தைக் கற்பதற்குத் தனி நூல் இருந்த்து என்று இதன் மூலம் தெரிய வருகிறது. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அதற்கு "ஓவிய விதானம்" என்று பெயர். அதைபோல், அரசன் அரசி அறைகளிலும் மேற்கூரைகளிலும், ஆடைகளிலும் ஓவியங்கள் வரைந்திருக்கிறார்கள். அந்த வகையில் சுவர்கள், மண்டபக் கூரைகள், திரைச்சீலை, ஆடை கேடயம் எனப் பயன்பாட்டுப் பொருள்கள் மீது அந்தக் காலக்கட்டத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்துள்ளது.

**"முத்துநிரைக் கொடித் தொடர் முழுவதும் வளைஇய**
**சித்திர விதானத்துச் செயபூங் கைவினை**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

**இலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த**

**விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய**

**மடையமை செலவின் வான் பொற் கட்டில்"1**

**(சிலப்பதிகாரம், நீர்ப்படை காதை – 202-203)**

எனும் பாடல் சேரன் செங்குட்டுவனது மனவியினுடைய அந்தப்புரத்தில் உள்ள அறையின் மேற்கூரையில் ஓவியங்கள் நிறைந்த கொடிதொடர் போன்ற காட்சிகள் வரையப்பட்ட தன்மையையும் சுட்டிக்காட்டுகிறது.

**"செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு**

**வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய**

**சித்திர மண்ட பத்திருக்க வேந்தன்**

**அமரகத் துடைந்த ஆரிய மன்னரொடு**

**தமரிற் சென்று தகையடி வணங்க"2**

**(சிலப்பதிகாரம், நாடுகற்காதை – 86-87)**

கோயில் மாக்களிற் கொற்றவன் தொழுது கோயிற் பணியாளருடன் சென்று மன்னவனை வணங்கி தும்பை வெம் போர்ச் சூழ்கழல் வேந்தே –தும்பை சூடிய செவ்விய போரில் வல்ல கழலணிந்த மன்ன செம்பியன் மூதூர் சென்று புக்கு – சோழனது பழைய நகரத்தை அடைந்து. ஆங்கு வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய அவ்விடத்தே வச்சிர நாட்டுப் பந்தரும் அவந்தி நாட்டுத் தோரணவாயிலும் மகதநாட்டுப் பட்டி மண்டமும் ஆய இவை கூடிய சித்திர மண்டபத்து இருக்க வேந்தன் – ஓவியத் தொழிலமைந்த மண்டபத்தின் கண்ணே சோழவரசன் இருந்தளவில், அமரகத்து உடைந்த ஆரிய மன்னரொடு – போரிடத்தே தோற்றோடிய ஆரிய அரசர்களுடனே தமரிற் சென்று தகையடி வணங்க – அரசனுடைய பரிவாரத்தார் வழிவடிச் சென்று அம்மன்னனுடைய அழகிய அடிகளை வணங்க;

எனவரும் சிலப்பதிகாரம் தொடரால் சோழ மன்னனது பழமை மிக்க நகரில் வச்சிரம், அவந்தி, மதம் ஆகிய நாட்டவரால் அழகுடன் செய்யப்பட்ட ஓவியங்கள் நிறைந்த கலைக் கூடங்களாகவும் அமைந்த செய்தியினைக் காண முடிகின்றது.

**"அலத்தகம் ஊட்டிய அஞ்செய் சீறடி"3**

**(சிலப்பதிகாரம்-6.82)**

என மாதவியின் வண்ண அலங்கார வரைவுகளை இளங்கோவடிகள் கூறுகின்றார்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

**ஓவிய எழினி**

**"ஓவிய எழினி முடிவுடன் போக்கு**
**விதானித்துப் படுத்த வெண்கால் அமளின்"4**

**(சிலப்பதிகாரம், கடலாடுகாதை – 169-170)**

இச்சிலப்பதிகார வரிகள் மூலம் ஓவிய எழினி இருந்தமையை அறியமுடிகிறது. ஓவிய எழினி என்பது ஓவியங்கள் வரையப்பட்ட திரைச்சீலையாகும்.

**"புன்னை நிழற் புதுமணற் பரப்பில்**
**ஓவிய எழினி சூழவுடன் போக்கி**
**விதானத்துப் படுத்த வெண்கால்"5**

**(சிலப்பதிகாரம் 168-170)**

கோவலனும் மாதவியம் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் புன்னை மரத்து நிழலில் ஓவியம் வரையப்பட்ட திரைச் சீலைகளை அறைபோன்று கட்டி மறைவாக்கி அதனுள் கட்டிலின் மீது இருந்தனர் என்று சிலம்பின் கடலாடு காதை உரைக்கிறது.

**மணிமேகலை**

மணிமேகலையில் ஓவியத்தைப் பற்றி பல செய்திகள் குறிப்புகள் இடம் பெறுகிறது.

**ஓவிய நூல்**

ஓவிய நூல் பற்றி மணிமேகலை குறிப்பிடுகிறது. நாட்டிய மகளிர் ஓவிய நூலினைக் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும் ஆகையால் அதன்படி மாதவி அந்நூலினைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவளாக விளங்கினாள் என்ற மணிமேகலை குறிப்பிடுகிறது.

**"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓவியச் செந்நூல் உரைநூற்கிடைக்கையும்**
**கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை**
**நல்தவம் புரிந்த்து நாண்உடைத்து என்றே"6**

**(மணிமேகலை 2: 30-33)**

நாடக மகளிர்க்கென்றே வகுக்கப்பட்ட ஓவியக் கலையோடு அதன் உரை-நூல் கருத்துக்களையும் கற்று அவற்றில் துறைபோகிய பொற்றொடி நங்கையாகிய ஒருத்தி நல்ல தவம் புரிந்துகொண்டு வாழ்தல் பிறர் நாணும்படியாக உள்ளது என்று மூதூரில் உள்ள அளவில்லாத ஆன்றோர் பேசிக்கொள்கின்றனர்.

சிலம்பிற்க்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் தமது காலம் வரை இருந்த ஓவிய நூலிலிருந்து மேற்கோள் பாடல் ஒன்றை தமது உரையில் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே தமிழில் எழுதப்பட்ட இந்நூல் தமிழ்நாட்டில் நீண்ட காலம் வழக்கிலிருந்து மறைந்துள்ளது. தமிழர்கள் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர் என்பதற்கு இந்நூல் சான்றாக உள்ளது.

**மணிமேகலையில் ஓவியமும் ஓவியரும்**

சித்திரம் வரைவோரை மணிமேகலையில் ஓவியர், ஓவிய பாக்கள், வித்தகர் என்று குறிப்பிடபடுகின்றனர். ஓவியத்தை வட்டிகைச் செய்தி என்று மணிமேகலை கூறுகிறது. வட்டிகளில் வண்ணங்களைக் கொண்டு சித்திரம் வரைவதால் ஓவியம் வட்டிகைச் செய்தி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**புனையா ஓவியம்**

புனையா ஓவியம் பற்றி மணிமேகலையில் பல இடங்களில் வருகிறது. வீட்டினுள் புகுந்த எளிய கோலத்துடன் அலங்காரம் புனைவின்றி அசையாது நின்ற மணிமேகலையைப் புனையா ஓவியத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார் சாத்தனார்.

**“மனையகம் புகுந்து மணிமேகலைதான்**
**புனையா ஓவியம் போல நிற்றலும்”7** **(மணிமேகலை – 16-130)**
**“புனையா ஓவியம் புறம்போந் தென்ன”8** **(மணிமேகலை - 22-88)**

ஓவியத்தில் வரையப்படும் உருவங்களை வண்ணங்களைக் கொண்டு தீட்டும் வழக்கத்திற்கு முன்பாக அவற்றைக் கோடுகளால் ஆன உருவமாக மட்டும் வரைவர். இத்தகைய கோடாக வரையும் ஓவியங்கள் பற்றிச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இதனை புனையா ஓவியம் என்று பெயரிட்டு அழைத்ததையும் அறிய முடிகிறது.

தலைவனைப் பிரிந்தால் மிகுந்த ஆடை அலங்காரம் புனைவுகள் இல்லாமல் வருத்தத்துடன் எளிமையாகக் காட்சியளித்த தலைமகளை (பாண்டிமா தேவி) நெடுநல் வாடையில் புனையா ஓவியம் போல இருந்ததாக தெரிவிக்கிறது. இவ்வடிக்கு உரையெழுதிய நச்சினார்கினியர் வண்ணங்களைக் கொண்டெழுதப் படாத ஓவியம் என்று கூறுகிறார்.

**வட்டிகைச் செய்தி**

பூம்புகாரில் தன் காதலியுடன் யாழ் வாசித்துக் கொண்டிருந்த எட்டி குமரன் திடீரெனச் சிந்தனை வயப்பட்டவனாய் ஓவியம் போன்று அசைவதற்று இருந்தான் அசைவற்று இருந்த அவன் நிலையை வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவை போன்று இருந்ததாகச் சீத்தலைச் சாத்தனார்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

தெரிவிக்கின்றார்.

**"தகரக் குழலாள் தன்னொடு மயங்கி**
**மகர யாழின் வான்கோடு தழீஇ**
**வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்**
**எட்டி குமரன் இருந்தோன் தன்னை"9**

**(மணிமேகலை – 55-58)**

நாடகம் ஆடும் மகளிர் வாழும் சிறப்பு மிக்க வீதி வழியாக உதயகுமாரன் வந்து கொண்டிருந்தான் அங்கே பொன்னால் அழகுபடுத்தப்பட்டிருந்த ஒரு மாளிகை. அதில் காற்று நுழையும் சாரளத்தில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அங்கே போடப்பட்டிருந்த மெத்தை மேல் நகர எண்ணெய் ஊட்டி மணக்கும் கூந்தலை உடையவளைத் தழுவிய வண்ணம் கையில் மகர யாழை மீட்டிக்கொண்டு எட்டிக் குமரன் என்பவன் வீற்றிருந்தான். அவன் தீட்டிய ஓவியம் போலச் செயலிழந்து காணப்பட்டான்.

சித்திரம் வல்ல ஓவியர் தமது கைத்தொழிலால் சிறப்புடன் வரைந்து வைத்த ஓவியச் சீலையைப் போர்த்தியது போன்று உவவனம் (ஒரு தோட்டம்) பூம்புகாரில் இருந்தது என்று மணிமேகலை கூறுகிறது.

**"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்**
**சித்திரச் செய்கைப் படாம் போர்த் ததுவே**
**ஒப்பந் தோன்றிய உவவனம்"10**

**(மணிமேகலை 167-169)**

வட்டிகைப் பலகைக் கொண்டு ஓவியம் வரையப்பட்டதால் வட்டிகைச் செய்தி என்று ஓவியத்தினை மணிமேகலை குறிப்பிடுகிறது. வட்டிகை மணிப்பலகை என்று கூறுகின்றனர்.

**ஓவியம் இடம் பெறும் இடங்கள்**

துறவிகள் உறைந்த தவச்சாலைகள் பெரிய மாளிகை, வீடுகள் ஆகியவற்றில் ஓவியங்கள் வரைந்து வைக்கப்பட்டிருந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது. வஞ்சி மாநகரில் புத்தத் துறவிகள் இருக்கும் தவச் சாலையில் ஓவியம் வரையப் பட்டிருந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது.

**"சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்**
**கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்"11**

**(மணிமேகலை 66-67)**

காவிரிப்பூம்பட்டினத்தில் சுடு மண்ணால் (செங்கல்லால்) கட்டப்பட்ட வீடுகளின்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

வெளிப்புறத்தில் பூசப்பட்ட வெண்சுதையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. இவற்றில் வானவர் முதலிய பலவகை உயிர்களின் உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன.

அவ்வழியே சென்ற மக்கள் கண்ணைக் கவர்ந்த அவ்வோவியங்களைக் கண்டு மகிழ்ந்து நின்று கொண்டிருந்தனர் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

**"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்**
**சுடுமண் ஓங்கிய நெடு நிலை மனைதொறும்**
**மையறு படிவத்து வானவர் முதலா**
**எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி**
**வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய**
**கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்"12**

**(மணிமேகலை 126-131)**

**"ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்"13**

**(மணிமேகலை 5-7)**

உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளை வடிவமாக்கி வழங்கக் கூடிய வல்லமையுடையோர் என்று கூறுகிறது.

**"ஓவியச் செந்நூல் உரைநூர் இடக்கையும்"14**

**(மணிமேகலை 2-3)**

என்னும் மணிமேகலையில் தொடரால் ஓவிய நூல்களும் அவை பற்றிய விளக்க உரைகளும் இருந்தமையைக் காட்டுகின்றது.

**"வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய**
**கண்கவர் ஓவியம்"15**

**(மணிமேகலை 130-131)**

என்னும் மணிமேகலைத் தொடரால் அறியமுடிகின்றது திருக்கழுகு மலை மும்மணிக்கோவை ஓவியம் அமைத்த அழகிய வடிவினை கூறுகிறது.

**"பொன்னிற் பொலிந்த நிறம்"16**

**(மணிமேகலை 145)**

பலவகை நிறங்கள் இருந்ததைக் காட்டுகின்றது.

**"செம்பு செய்ஞ்ஞரும் சஞ்ச காரரும்**
**பைம் பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**மரங்கொல் தச்சரும் மண்ணீய டாளரும்**

**வரம்தர எழுதிய ஓவிய மாக்களும்**

**தோலின் துன்னரும் துன்ன வினைஞரும்"17**

**(மணிமேகலை – 40)**

செம்பு உலோகத்தில் படிமம் செய்யும் கஞ்சகாரர், பொன் அணிகலன் செய்யும் பொற்கொல்லர், மரப்பொருள்கள் செய்யும் தச்சர், மண்பொம்மை செய்வோர் ஆகியோர் வாழும் தெருக்களில் வரம் தரும் தெய்வ உருவம் எழுதும் ஓவியர் வாழ்ந்தனர் என்று ஓவியர்களைக் குறிப்பிடுகிறது.

**சீவக சிந்தாமணி**

பெருங்கதையினை அடுத்து, திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் ஓவியம் பற்றிய குறிப்புகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இக்காவியம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருதப்படுகிறது.

**ஓவியச் செய்திகள்**

ஓவியம், ஓவியர், வட்டிகைப் பலகை, துகிலிகை பற்றி பல குறிப்புகள் சிந்தாமணியில் வருகின்றன. ஓவியப் பாவை பற்றிச் சிந்தாமணியிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

**"உரைகிழித் துணரும் ஒப்பின்**

**ஓவியப் பாவை ஒத்தார்"18**

**(சீவகசிந்தாமணி 699)**

**"ஓவியர் தம் பாவியனொடு**

**ஒப்பரிய நங்கை"19**

**(சீவக சிந்தாமணி 2016)**

**"உயிர்பெற எழுதப்பட்ட**

**ஓவியப் பாவை யொப்பாள்"20**

**(சீவக சிந்தாமணி 2048)**

அநங்கமாவீணை என்னும் இயக்கி சீவகனை மயக்குவதற்காக அவனை நக்கினாள். அப்போது அவளுடைய அழகு படத்தில் எழுதப்பட்ட பெண் உருவம் போன்று அழகாகக் காணப்பட்டதாகும். இவை ஓவியப் பாவை பற்றிக் கூறுகிறது.

**வட்டிகைப் பலகை**

பெண்கள் பல வட்டில்களில் வண்ணங்களை வைத்துக் கொண்டு துகிலிகை கொண்டு

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

ஓவியம் தீட்டினர் என்று திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார் சீவகனின் நிலையைக் காண்பதற்காக வட்டிகை மணிப் பல வகையில் துகிலிகை கொண்டு ஓவியம் தீட்டிக்கொண்டு இருந்த பெண்கள் அப்படியே விட்டு விட்டு ஓடிவந்தனர் என்ற சீவக சிந்தாமணி கூறுகிறது.

**“வட்டிகை மணிப்பலகை வண்ணநுண் துகிலிகை**

**இட்டிடை நுடங்கநொந் திரியலுற்ற மஞ்ஞையில்**

………………………………………………………………………………………………

………………………………….

**மட்டவிழ்ந்த கோதையார்கள் வந்து வாயில் பற்றினார்”21**

**(சீவகசிந்தாமணி 1107)**

**ஓவியத்திறன்**

சிந்தாமணியில் சீவகன் பல இடங்களில் ஓவியம் தீட்டுவதில் வல்லவனாகக் காட்டப்பட்டுள்ளான். யானை முன் நடுங்கி நின்ற குணமாலையின் உருவத்தைத் தன் மனத்தில் சீவகன் பதித்து வைத்தான். அதனை அப்படியே வண்ண ஓவியமாகத் தீட்டினான். மீண்டும் மீண்டும் அவ்வோவியத்தைக் கண்டு களித்துத் திருத்தியதாகச் சிந்தாமணி ஆசிரியர் கூறுகின்றார்.

**“கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்**

**தீட்டினான் கிழிமிசைத் திலக வாள்நுதல்**

**வேட்டமால் களிற்றிடை வெருவி நின்றதோர்**

**நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே”22**

**(சீவகசிந்தாமணி 1003)**

ஓவியக் கலைஞர்கள் எப்படித் தாம் கண்ட காட்சிகளை மனத்தில் பதித்து வைத்து அதனை அப்படியே தீட்டினர் என்பதை இப்பாடல் சுட்டுகிறது.

**ஓவிய மண்டபம்**

காவியத் தலைவி காந்தர்வ தத்தை தங்கும் மண்டபம் ஒன்றை விளக்க வந்த திருத்தக்கதேவர் ஓவியர்களுக்கு ஆலயம் என்று சொல்லும் படியாக அதில் ஓவியங்களை வரைந்து வைத்திருந்தனர் என்று கூறுகின்றார்.

**“பாவைஅவள் இருக்குமிடம் பளிங்குச்சுவர் இயற்றிக்**

**கோவை குளிர் முத்தின் இயல் கோதையொடு**

**கொழும் பொன்**

**மாலையொடு மாலைதலை மணந்துவர நாற்றி**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07052026

**ஆலயம் இஃது ஓவியர்கட்கு என்ன அணி அமைத்தார்"23**

**(சீவக சிந்தாமணி 594)**

மற்யோர் இடத்தில் சித்திரங்கள் வரைந்து வைத்த மண்டபம் ஒன்று சித்திர மாமண்டபம் என்று சிந்தாமணியில் குறிப்பிடப்படுகிறது.

**ஓவியத்தில் தெய்வ உருவங்கள்**

அரண்மனை, கோயில் போன்ற இடங்களில் தெய்வ உருவங்களை ஓவியமாகத் தீட்டி வைத்து வழிபடுவது அக்காலத்து வழக்கமாக இருந்துள்ளது. சீவக சிந்தாமணியில் விசயை என்னும் அரசி சுடுகாட்டில் தான் கண்ட பெண் தெய்வ உருவத்தினையும் தான் ஏறி வந்த மயிற் பொறியையும் சுவரிலே ஓவியமாக வரைந்து வைத்தாள் என்று திருத்தக்கதேவர் கூறுகின்றார்.

**"தனியே துயருழந்து தாழ்ந்து**
**வீழ்ந்த சுடுகாட்டுள்**
**இனியான் இடர்நீக்கி ஏமஞ்**
**சேர்த்தி உயக்கொண்ட**
**கனியார் மொழியாட்கும் மயிற்கும்**
**காமர் பதிநல்கி**
**முனியாது தான்காண மொய்கொள்**
**மாடத் தெழுது வித்தாள்"24**

**(சீவகசிந்தாமணி 2603)**

**முடிவுகள்**

1. தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்கள் கூறும் பண்பாட்டு மரபில் ஓவியக்கலையின் சிறப்பு ஆராயப்பட்டது.

2. காப்பியத்தில் பெரும்பான்மையாக ஓவியச் செய்திகள் இடம்பெறும் நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி இடம்பெற்ற ஓவியச் செய்திகள் கண்டறியப்பட்டுள்ளது.

3. இரட்டைக்காப்பியம்மான சிலப்பதிகாரம், மணிமேகலையில் ஓவியம் இடம் பெற்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளது.

4. சிலப்பதிகாரத்தில் சித்திரமாடம், விதானங்கள், கலைக்கூடங்கள், ஓவிய எழினி போன்ற ஓவியம் தொடர்பான செய்திகள் அறியப்பட்டுள்ளது.

5. மணிமேகலையில் ஓவியநூல், ஓவியமும் ஓவியரும், புனையா ஓவியம், வட்டிகைச்செய்தி ஓவியம் இடம் பெறும் இடங்கள் போன்றவைகளை ஆராயப்பட்டுள்ளது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

6. சீவக சிந்தாமணியில் ஓவியப்பாவை, வட்டிகைப்பலகை, சீவகன் ஓவியத்திறன், ஓவிய மண்டபம், ஓவியத்தில் இடம் பெறும் தெய்வ உருவங்கள் என ஐம்பெரும் காப்பியங்கள் காட்டும் தமிழ் ஓவிய பண்பாட்டு மரபுகளை ஆராய்ந்து பாடல் விளக்கம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

7. ஓவியத்தின் சிறப்பையும் வளர்ச்சியும் எவ்வாறு காப்பியத்தில் இடம் பெற்றிருந்தன என்பதை விளக்கும் வகையாக இவ்வாய்வு அமைந்தது.

**துணைநூற்பட்டியல்**

[1]. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*. உரை: புலியூர்கேசிகன், பாரி நிலையம், 2014, பக். 106-07, 419-20, 429-30.
[2]. இராசாராம், துரை., உரையாசிரியர். *சீவகசிந்தாமணி (இலக்கணையார் இலம்பகம் / முத்தி இலம்பகம்)*. முல்லை நிலையம், 2015, பக். 290.
[3]. ---, உரையாசிரியர். *சீவகசிந்தாமணி (காந்தவருதத்தையா இலம்பகம் / குணமாலையார் இலம்பகம்)*. முல்லை நிலையம், 2015, பக். 49, 100, 241, 290.
[4]. ---, உரையாசிரியர். *சீவகசிந்தாமணி (சுரமஞ்சரியார் இலம்பகம் / மண்மகள் இலம்பகம் / பூமகள் இலம்பகம்)*. முல்லை நிலையம், 2015, பக். 17, 33.
[5]. சீத்தலைச்சாத்தனார். *மணிமேகலை (மூலம் மட்டும்)*. மின்னூல் வடிவமைப்பு, பக். 12-14, 18-22, 24, 40, 72-73, 101-02, 138-39.

## References

[1]. Ilango Adigal. *Silappathikaram*. Commentary by Puliyur Kesikan, Pari Nilayam, 2014, pp. 106-07, 419-20, 429-30.
[2]. Rajaram, Durai, commentator. *Seevaka Chinthamani (Ilakkanaiyar Ilambagam / Mutthi Ilambagam)*. Mullai Nilayam, 2015, p. 290.
[3]. ---, commentator. *Seevaka Chinthamani (Kanthavarutthaiyar Ilambagam / Gunamalaiyar Ilambagam)*. Mullai Nilayam, 2015, pp. 49, 100, 241, 290.
[4]. ---, commentator. *Seevaka Chinthamani (Suramanjariyar Ilambagam / Manmagal Ilambagam / Boomagal Ilambagam)*. Mullai Nilayam, 2015, pp. 17, 33.
[5]. Soolamani Seethalai Sathanar. *Manimekalai (Moolam Mattum)*. E-book ed., pp. 12-14, 18-22, 24, 40, 72-73, 101-02, 138-39.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam